# மாகாண சபை தேர்தல் முறையை மீளாய்வு செய்வதற்கான சிவில் சமூகக் குழுவின் அறிக்கை

1 ஆகஸ்ட் 2018

CMEV

PAFFREL

# மாகாண சபை தேர்தல் முறையை மீளாய்வு செய்வதற்கான சிவில் சமூகக் குழுவின் அறிக்கை

1 ஆகஸ்ட் 2018

குலப்பு-அங்காத்தவர் விகிதாசார பிதிநிதித்துவ முறை முதல் முறையாக 2018ம் ஆண்டு பெப்ரவரி மாதம் உள்ளாட்சி மன்றத்தேர்தலில் பயன்படுத்தப்பட்டது.இது முன்னைய திறந்த விகிதாசார பிரதிநிதித்துவத்தில் இருந்த பல பிரச்சினைக்கு தீர்வுகள் தநதது.புதிய முறை ….

1. ‘’மனாபே பொற’’ எனும் விருப்பத்தெரிவு இழுபறி நீங்கியது( அதாவது தேர்தல் பிரச்சாரத்தின்போது கட்சிகளுக்கிடையில் போட்டித்தன்மை குறைவடைந்திருந்தது )
2. தமது ஆசன தேர்தல்தொகுதிக்கு பொறுப்பு கூறக்கூடிய மக்கள் பிரதிநிதி நியமிக்கும் நடைமுறைக்கு திரும்பியுள்ளமை
3. வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார வேலை பளு குறைந்தது

அத்துடன் இந்த புதிய தேர்தல் முறை மிக தீவிர தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் குறைந்துள்ளன.அதனால் நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.தனி வேட்பாளர்களைவிட அரசியல் கட்சிகளின் இருப்பை அது ஊக்குவிக்கிறது.அத்துடன் வாக்கெண்ணும் நடவடிக்கைகளின் தீவிரத்தன்மை குறைந்து இலகுவாக்கப்பட்டுள்ளது.

பிரப்ரவரி 2018 உள்ளுராட்சி தேர்தலின் பின்னர் புதிய தேர்தல் முறை குறித்து பல விமர்சனங்கள் எழுந்தன.அவற்றுள் சில அந்த தேர்தல் முறையை புரிந்துகொள்ளாமையால(பிழையாக புரிந்துகொண்டமையால்) எழுந்தவை.ஆனால் ஏனையவை,இலங்கையின் அரசியல் கலாசாரத்தின் ஆழமான கட்டமைப்புக்கள் பற்றியவை.மேலும் சமகால அரசியல் நிலைமை பற்றியதாகவும் அமைந்திருந்தன.மேலும் சிலர் அந்த தேர்தல் முறையில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டியுள்ளனர்.அவற்றை திருத்தவேண்டியது காலத்தின் தேவையாகும்.

தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் சரியானதை செய்ய வேண்டும் என்பதை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் செயல்படும் சிவில் சமூகம் என்ற வகையில் நாம் மிக கௌரவத்துடன் இதனை சமர்ப்பிக்கிறோம்.

***பாராளுமன்ற சட்டம், கலப்பு அங்கத்தவர் விகிதாசார முறை குறித்த பிழையான அனுமானங்களை உடனடியாக களைய வேண்டும்.பொருத்தமான சட்டவாக்கம் மூலம் இதில் உள்ள உண்மையாக பிரச்சினைகளை தீர்த்தல்,பதவிக்காலம் முடிவடைந்த உரிய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை தாமதமின்றி நடத்தல்***

புதிய மாகாண சபை தேர்தல் முறையில் உள்ள பிரச்சினைகளை மேற்கோள்காட்டிய எமது பரிந்துரைகள் அடங்கிய சுருக்கம் அட்டவணை -1 விபரிக்கப்பட்டுள்ளது.அதே வேளை சிவில் சமூக குழு மற்றும் ஆலோசனை மீளாய்வு செயல்பாடுகள் இணைப்பு-1 இல் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளன. சாதாரண அடிப்படை பரிந்துரைகளும் அவற்றின் பின்னனி காரணங்களும் இணைப்பு-3 இல் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளன.மேலும் பொதுவாக கேட்கப்படும் கேள்விகளும் அவற்றிட்கான விளக்கங்களும் இணைப்பு-2 விபரிக்கப்பட்டுள்ளன்.

## அட்டவணை - 01

| பிரச்சினை | பரிந்துரைகள |
|---|---|
| 1. புதிய தேர்தல் முறை தொடர்பாக பிழையாக புரிந்துகொள்ளல் | பொதுவாக கேட்கப்படும் கேள்விகளும் அவற்றின் விளக்கங்களையும் பாராளுமன்ற உறுப்பினர்கள்,மாகாசபை அங்கத்தவர்கள்,உள்ளுராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுடன் ஊடகங்கள் வாயிலாக பகிரவும் |
| 2. ஏல்லை நிர்ணயம் தொடர்பில் முரண்பாடுகள் (இணக்கமின்மை ) | முாகாண சபை சட்டத்தின் ( திருத்தப்பட்ட ) 3A பிரிவு எல்லை நிர்ணய விடயங்களை விபரித்துள்ளது.இதனை அரசாங்கமும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பின்பற்ற வேண்டும் |
| 3. அரசியல் கட்சிகளால் இயக்க ரீதியான பெரும்பாண்மையை சபைகளில் ஏற்படுத்த முடியாமை | மாகாண சபைத் தேர்தலில் **<u>100இற்கும் குறைவான அங்கத்தவர்களை</u>** கொண்ட சபைகளில் அதிக வாக்குகளை பெறும் கட்சிக்கு **4** போனஸ் ஆசனங்களை வழங்குங்கள்<br><br>மாகாண சபைத் தேர்தலில் **<u>100 இற்கும் அதிக அங்கத்தவர்களை</u>** கொண்ட சபைகளில் அதிக வாக்குகளை பெறும் கட்சிக்கு **5** போனஸ் ஆசனங்களை வழங்குங்கள் |
| 4. மாவட்ட பட்டியலில் இருந்து ஏறத்தாழ 50 வீதமான அங்கத்தவர்கள் சபைக்கு சேர்க்கப்டும் வேளையில் சிறிய வாக்கு வித்தியாசத்தில் தேர்தல் தொகுதிகளை இழந்த வேட்பாளர்கள் மிகவும் அதிருப்தியடைகின்றனர் | கட்சி பட்டியலுக்கான தெரிவு முறையை ஜனநாயக முறையாகவும் பொதுவில் அனைவருக்கும் தெரியக்கூடிய நடைமுறையாகவும் மாற்றுக<br><br>மாவட்ட பட்டியலை முன் கூட்டியே தரப்படுத்தி, FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை) அடிப்படையிலான் தொகுதிவாரி தேர்தலில் வெற்றி பெறாத வேட்பாளர்களை நியமிப்பதற்கு அரசியல் கட்சிகளுக்கு மாவட்ட அங்கத்தவர் தெரிவில் அந்த கட்சிக்கான எண்ணிக்கையில் 1/3 பகுதியை ஒதுக்குவதற்கான உரிமையை வழங்குக |
| 5. வெற்றி பெறும் கட்சி பெரும்பாலும் எதுவித மாவட்ட பட்டியல் அங்கத்தவர்களை பெறுவதில்லை.கட்சிக்காக உழைத்த அங்கத்தவர்கள் மாவட்ட பட்டியலில் வர முடியாமை குறித்து அதிருப்தியடைந்துள்ளனர். | மேலே 3இல் குறிப்பிட்டவாறு மாவட்ட பட்டியல் அல்லது FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை)தேர்தல் தொகுதிகளில் வெற்றி பெற தவறிய வேட்பாளர்களை போனஸ் ஆசனங்களுக்காக முன்மொழியக்கூடிய நெகிழ்வுத்தன்மையை கட்சி செயலாளருக்கு வழங்குக. |
| 6. பெண்களின் பிரதிநிதித்துவம் | பெண்களுக்கான கட்டாய முன்மொழிவை அதிகரியுங்கள்.அதாவது FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை)யில் 1/6 ஆக இருப்பதை 1/5ஆக மாற்றுவதன் மூலம் தேர்தலில் போட்டியிடும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கலாம்<br><br>முன் கூட்டி தரப்படுத்தப்பட்ட மாவட்ட பட்டியலில் பெண்கள் மற்றும் ஆண்களின் பெயர்களை மாற்றுவதற்கான நடைமுறையை வலுப்படுத்துக.பெயர் பட்டியல் பெண்களின் பெயர்களுடன் ஆரம்பமாக வேண்டும். |

| | |
|---|---|
| | பாராளுமன்றம் விருப்பு வாக்களிப்பு முறைக்கு மீள சென்றால்,25 வீத பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் கட்டாய நடைமுறை உள்ளடக்கப்படல் வேண்டும்[5] |

[1] 2011 உள்ளூராட்சி மன்ற தேர்தலில் 4.52 % நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக அமைந்திருந்தன.2018ம் ஆண்டு தேர்தலில் இது 1.67 % ஆக வீழ்ச்சியடைந்திருந்தது.இது 2018ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மிக இலகுவாக புரிந்துகொள்ளக்கூடிய வாக்குச்சீட்டு காரணமாகவே இந்த சிறந்த பெறுபேறு கிடைக்கப்பெற்றது.

[4] இணைப்பு -2 இன் 3ம் பகுதியை பார்க்க

[5] மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பதனால் இந்த பரிந்துரை மேற்கொள்ளப்படுகிறது.மாகாண சபைகளில் தற்சமயம் பெண்களின் பிரதிநிதித்துவம் 5 வீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகிறது.

[1] இந்த முறையானது வேட்பாளர்களை கூட்டுப்பொறுப்புடன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட வைத்தது.முன்னைய முறையில் திறந்த விகிதாசார பிரதிநிதித்துவ பட்டியல் காரணமாக அரசியல் கட்சிகளுக்கிடையில் அனாவசிய போட்டிகள் ஏற்பட்டன.

# இணைப்பு 1

## குழுவின் அமைப்பும் ஆலோசனை செயல்பாடும்

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் புதிய தேர்தல் முறை பயன்படுத்தப்பட்டபொழுது பொது மக்கள் மத்தியில் இடம்பெற்ற கலந்துரையாடல் அல்லது பேச்சு , மாகாணசபை தேர்தலிலும் இந்த

புதிய முறை பயன்படுத்தப்படபோவதாக கூறப்பட்டபோது மேலும் தீவிரமடைந்தது.இதுவிடயம் தொடர்பில் மக்கள் மத்தியில் பேச்சுக்கள் மிக காரசாரம அமைந்துள்ளன.இந்த நிலைமை சீர்செய்ய,பிரதான அரசியல் கட்சிகள்-தேர்தல் ஆணைக்குழு-மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சு ,தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் ( PAFFEREL , CMEV ) புதிய தேர்தல் முறை குறித்து விளக்கமளிக்க,உரிய பங்காளர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டது.2017ம் ஆண்டு 17ம் இலக்க மாகாண சபை தேர்தல்(திருத்த) சட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த பவ்ரல் நிறுவனம்,CMEV ஆகியன யு எஸ் எயிட் நிறுவனத்தின் உதவியுடன் இந்த புதிய தேர்தல் முறை சட்டம் தொடர்பாக பங்காளர் மட்ட கலந்துரையடல் ஒன்றை இந்த வருடம் ஏப்ரல் மாதம் 25ம் திகதி ஒழுங்கு செய்திருந்தன.
மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா மற்றும் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகளுடன் இடம்பெற்ற ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தையை அடுத்து “கலப்பு அங்கத்தவர் விகதாசார முறை” குறித்து அனைத்து பங்காளரதும் கருத்துக்களை பெறும்படி பவ்ரல் மற்றும் CMEV நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பங்களார் பலந்துரையாடலின்போது கல்விமான்கள்,தேர்தல் நிபுணர்கள்,தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளை கொண்ட குழுவொன்றை நியமித்து மூலம் “கலப்பு அங்கத்தவர் விகதாசார முறை”யை ஆராய்வது சிறந்தது என விதந்துரைக்கப்பட்டது.பங்காளர் கலந்துரையாடலின் ஒரு வெளிப்பாடாகவே, இந்த சிவில் சமூக குழு, புதிய மாகாண சபை தேர்தல் முறையை மீளாய்வு செய்து வெளியிட்ட அறிக்கையாகும். இந்த பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் அமைச்சரவைக்கும் சமர்பித்து , மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் குறித்து ஆராயவிருப்பதாக மாகாண சபைகள் உள்ளுராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா உறுதியளித்துள்ளார்.

**மாகாணசபை தேர்தல் முறையை மீளாய்வு செய்யும் குழுவின் அங்கத்தவர்கள் விபரம் :**

- பேராசிரியர் சுதந்த லியனகே,பீடாதிபதி பிரயோக விஞ்ஞான பீடம்,ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- கலாநிதி.சுஜாதா கமகே,சிரேஸ்ட ஆராய்ச்சியாளர்,லேள் ஆசியா
- திரு ரோஹன ஹெட்டியாராச்சி,பிரதம நிறைவேற்று அதிகாரி – பவ்ரல் அமைப்பு
- மிருமதி குமுதினி சமுவேல்,ஆராய்ச்சியாளர் மற்றும் சமூக செயல்பாட்டாளர்,பெண்கள் மற்றும் ஊடக ஒன்றியம்
- திரு லூவி கணேசநாதன் - சட்டத்தரனி – ஆராய்ச்சியாளர்
- திரு மஞ்சுள கஜநாயக்க,தேசிய ஒருங்கிணைப்பாளர் - தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம்
- திரு எஸ் மெதவெவ,தலைவர்- தேர்தல் நிபுணர்களின் சங்கம் மற்றும் ஓய்வு பெற்ற சிவில் அதிகாரி
- திரு. பி எம் சிரிவர்தன,முன்னாள் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்
- திரு அமர் குணதிலக , பிரதம நிறைவேற்று அதிகாரி,மாகா நிலையம்

மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா மற்றும் தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேஸப்பிரிய ஆகியோருடன் இடம்பெற்ற ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தையை அடுத்து “கலப்பு அங்கத்தவர் விகதாசார முறை” குறித்து அனைத்து பங்காளரதும் கருத்துக்களை பெறும்படி குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.ஏனெனில் இந்த தேர்தல் முறையே எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ளதால்,இது விடயம் தொடர்பில் முன்வைக்கப்படும் அனைத்து பரிந்துரைகளும் அடங்கிய ஒன்று சமர்ப்பிக்கப்படுதல் அவசியமாகும்.

குழு பல சந்தரப்பங்களில் சந்திப்புக்களை மேற்கொண்டது.( மே மாதம் 14,21 மற்றும் 30ம் திகதி,ஜீன் மாதம் 6,14,15ம் திகதிகள்,ஜீலை மாதம் 10,18,23ம் திகதிகள் ).2017ம் ஆண்டு 17ம் இலக்க மாகாண சபை தேர்தல் (திருத்த) சட்டம் தொடர்பில் கலந்துரையாடி மீளாய்வு செய்யப்பட்டது.இங்கு சில மாற்றங்களுக்கு மேலதிகமாக,இலங்கையில் ஜனநாயக பிரதிநிதித்துவ பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான சில பிரச்சினைகளும் அடையாளம் காணப்பட்டன.அவை கீழே தரப்பட்டுள்ளன

a) பிரச்சாரத்திற்கான நிதி
b) உள்ளக கட்சி ஜனநாயகம்
c) வேட்பாளர் தெரிவு
d) கட்சி தாவலை தடுத்தல்

முன்னெடுக்கப்படும் எந்த மாற்றமும் அமுலாக்குவதற்கு அனாவசிய நேரத்தை எடுத்து,அது உரிய அரச பங்களார்களுக்கு தேர்தலை பிற்போடுவதற்கு வசதியை ஏற்படுத்தி கொடுக்ககூடாது என்பதில் இந்த குழு மிக கவனமாக உள்ளது.

அதனால் 3-12 வார காலப்பகுதியில் பிரயோக ரீதியாக அமுல்படுத்தக்கூடிய சில திருத்தங்கள் குறித்து குழு ஆராய்ந்தது.

எல்லை நிர்ணய விடயம் தொடர்பில் ஆராய்வதை குழு தவிர்த்துள்ளது.ஏனெனில் அது சட்ட மூலத்தைவிட தேர்தல் தொகுதி அமுலாக்கல் தொடர்பாக அமைந்துள்ளது.
சுட்டத்தை திருத்தும் முழுமையான நடைமுறை 3 மாதங்கள் வரையான காலத்தை எடுக்கலாம்.அந்த மாற்றங்கள் சட்ட வரைபுபடுத்தப்பட்டு சட்ட மா அதிபர் திணைக்களத்தால் ஆராயப்பட வேண்டும்.சமகால அரசியல் அமைப்பிற்கு அமைவாக உள்ளதா என பரிசீலக்கப்படல் வேண்டும்.அது ஒரு நீண்ட நடைமுறை.பங்குதாரர்கள் மீளவும் பழைய விருப்ப தெரிவு முறைக்கு சென்றாலும் இதே நடைமறை பின்பற்றப்படல் வேண்டும்.அதே காலம் செல்லும்.எனவே இந்த புதிய முறை 2/3 பெரும்பாண்மையுடன பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.எனவே இந்த புதிய முறை ( ஏதேனும் திருத்தங்களுடன் ) தொடர்ந்து பேண்படுதலையே குழு விரும்புகிறது.

முதல் படிமுறையாக ,உத்தேச சட்ட திருத்தம் குறித்து உரிய பங்காளர்களிடம் இணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.( அரசியல் கட்சிகள்,தேர்தல் ஆணைக்குழு,முக்கிய அரசியல்வாதிகள்,மாகாண சபை அங்கத்தவர்கள்,சிவில் சமூகம்,கல்விமான்கள்(அரசியல் விஞ்ஞான பீடங்களை சேர்ந்தவரக்ள் ),பெண்கள் மற்றும் இளைஞர் குழுக்கள்.

2017ம் ஆண்டு 17ம் இலக்க மாகாண சபை தேர்தல் (திருத்த) சட்டம் குறித்து ஒவ்வொரு கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக அறிந்துகொள்ள பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் குழு கடிதங்களை அனுப்பியது.இந்த அறிக்கை வெளியாகும் தருணம் வரை,மிக குறைந்த பிரதிபலிப்புக்களே கிடைக்கப்பெற்றன என்பதை கவலையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

**ஜீன் மற்றும் ஜீலை மாதங்களில் கீழ் காணும் சந்திப்புக்கள் இடம்பெற்றன.**

ஜீன் 6ந் திகதி – தேர்தல் ஆணைக்குழு தலைவர் திரு மகிந்த தேஸப்பிரிய
ஜீன் 18ந் திகதி – காலை – வெளிமாவட்ட மாகாண சபை அங்கத்தவர்கள்,பெண்கள் குழுக்கள்,சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் கல்விமான்கள்
ஜீன் 18ந் திகதி – மாலை – மேல் மாகாண சபை அங்கத்தவர்கள், பெண்கள் குழுக்கள்,சிவில் சமூக செயல்பாட்டாளர்கள்
ஜீலை 4 - மாகாண சபை அங்கத்தவர்கள்,பெண்கள் குழுக்கள்,சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு கல்விமான்கள்
ஜீலை 5 – கௌரவ பைஸர் முஸ்தபா, மதகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி மன்றங்கள் அமைச்சர்
ஜீலை 10 – ஜனநாயக இடதுசாரி முன்னனியுடன் பேச்சுவார்த்தை

ஜுலை 12 – மலைய மக்கள் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு மயில்வாகனம் திலகராஜ் உடனான சந்திப்பு
ஜீலை 18 – கூட்டு எதிர்க்கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் –திரு டலஸ் அழகாப்பெரும,திரு ரஞ்சித் டி சொய்ஸா,திரு ஜனக வக்கும்புர
ஜீலை 26 – பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் - சம்பிக ரணவக்க – ஜாதிக ஹெல உருமய

# இணைப்பு 2

## குழுவின் பரிந்துரைகளும் அதன் அடிப்படை காரணங்களும் பின்னனியும்

### 1. மாவட்ட பட்டியலும் மாவட்ட அங்கத்தவர்களும்

2017ம் ஆண்டு 17ம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் (திருத்த) சட்டத்தின்படி, 50 வீதமான சபை ஆசனங்கள் FPP ( முதல்-கடந்த-பின்னர்) முறைப்படி தெரிவு செய்யப்படுவதற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.எஞ்சிய 50 வீதம் மாவட்ட அங்கத்தவர் பட்டியலில் இருந்து தெரிவாகிறது.மாவட்ட அங்கத்தவர் தெரிவு குறித்து பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் அநுபவத்தின் அடிப்படையில் சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

a. மாவட்ட அங்கத்தவர் பட்டியலில் வேட்பாளர்களை தெரிவு செய்வதில் கட்சி செயலாளர்களுக்கு வரையறையற்ற அதிகாரம் இருத்தல்.[1] இது சபையின் 50 வீதமான அங்கத்தவர்களில் எவர் சபையில் இடம்பெறுவார் என்பது தொடர்பில் வாக்காளர்களுக்கு எந்த ஒரு பரிந்துரையும் செய்ய முடியாத நிலை
b. மாவட்ட பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் சிறந்த பங்களிப்பை மேற்கொள்வதை உறுதிப்படுத்த முடியாத நிலை
c. FPP ( முதல்-கடந்த-பின்னர்) முறையில் சிறிய வித்தியாசத்தில் தோல்வி கண்டவர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.இவர்களை மாவட்ட பட்டியலூடாக தெரிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை.சில தேர்தல் தொகுதி மட்ட தேர்தல் மிக போட்டித்தன்மை வாய்ந்தவைஇஅந்த வேளையில் கடுமையாக போட்டியிட்டு சிறிய வித்தியாசத்தில் தோல்வி கண்டவருக்கு உரிய நிவாரணம் இல்லாமை.
d. வேற்றி பெறும் அரசியல் கட்சிக்கு மாவட்ட பட்டியலில் போதிய சந்தர்ப்பம் கிடைக்காததனால் சிறுபாண்மை,பிரபல நிபுணர்கள் மற்றும் பெண்களை சபைக்கு கொண்டு வர முடியாத நிலைமை.

இதற்கான தீர்வு 2 பிரிவுகளை கொண்டுள்ளது.முதலில் தரப்படுத்தப்பட்ட மற்றும் பூரணத்துவம் கொண்ட பட்டியல்களை பயன்படுத்தி அங்கத்தவர்களை சபைக்கு கொண்டு வரலாம்.அந்த வகையில் தாம் வாக்களிக்கும் அரசியல் கட்சி வெற்றி பெற்றால் எந்த உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர் என்ற அனுமானத்தை வாக்காளர்கள் கொண்டிருப்பர்.அந்த வகையில் தனி நபர் மற்றும் தரப்படத்தப்பட்ட பட்டியலில் உள்ள அங்கத்தவர் தெரிவிற்காக வாகக்ளிக்கின்றனர் என்ற உணர்வை வாக்காளர் கொண்டிருப்பர்.

இரண்டாவது முறையாக மாவட்ட பட்டியலை முன் கூட்டியே தரப்படுத்தி, FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை) அடிப்படையிலான தேர்தல் தொகுதியில் வெற்றி பெறாத வேட்பாளர்களை நியமிப்பதற்கு அரசியல் கட்சிகளுக்கு மாவட்ட அங்கத்தவர் தெரிவில் 1/3 பகுதி உரிமையை வழங்குதலாகும்.

FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை)யில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் நன்மைகருதி அந்த சபையில் இருப்பதற்கான நெகிழ்வுத்தன்மையான நிலைப்பாட்டை உருவாக்குதலே இதன் அடிப்படையாகும்.
எஞ்சிய மாவட்ட அங்கத்தவர் உரித்துடைய ஒவ்வொரு அரசியல் கட்சியின் இடங்களும் தரப்படுத்தப்பட்ட பட்டியலின் அடிப்படையில் நிரப்பப்படும்.( பெண்கள் பிரதிநிதித்துவத்தின் 4ம் பிரிவை பார்வையிடுக )

## 2. மேலதிக தொங்கு-நிலை

ஒரு கட்சி FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை) அடிப்படையில் விகிதாசார பங்கீட்டைவிட கூடுதலான எண்ணிக்கை ஆசனங்களை பெறும்வேளையில் மேல்நிலை தொங்கு நிலை உருவாகிறது. உதாரணமாக 2018 உள்ளுராட்சி தேர்தலில் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன 41.4 வீத வாக்குகளை பெற்றது.எனவே அந்த கட்சி 32 இல் 15 ஆசனங்களை பெற்றிருக்க வேண்டும்.இந்த கட்சி 21 FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை)யில் 21 இல் 18 ஆசனங்களை கைப்பற்றியிருந்தது.இது 3 மேலதிக தொங்கு நிலை ஆசனங்களை உருவாக்கியது.இந்த ஆசனங்கள் சபையின் மொத்த ஆசன எண்ணிக்கை 3 ஆல் அதிகரிக்கப்பட்டு 38 ஆக மாற்றப்பட்டது.

தொங்கு நிலை ஆசனங்கள் மொத்த ஆசன எண்ணிக்கையை மாற்றாமலும் நிலையாக பேணலாம்.முன் கூட்டியே மொத்த எண்ணக்கையிலிருந்து தொங்கு நிலை அசனங்களை கழித்து எஞ்சிய தொகையை அனைத்து கட்சிகளிடையே பகிர்ந்தால் அந்த நிலையை எட்டலாம்.மாகாண சபை தேர்தலில் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டால் சிறந்தது.ஏனெனில் மாகாண சபை ஆசன எண்ணிக்கை அதிகரிக்க முடியாது.

[1] மாகாண சபைகள் தேர்தல் சட்டமூலத்தின் சரத்துக்கள் 58A(4)(b) and 58A(6) ஆகியவற்றை பார்வையிடுக

இலங்கையில் பாரிய எஞ்சிய முறையே விகிதாசார கணிப்பீட்டை இலகுவாக மேற்கொள்வதற்கான முறையாகும்.மேலும் இரண்டு வழிமுறைகள் ஏனைய நாடுகளில் நடைமுறையில் உள்ளன.அவை

D'Hondt முறை மற்றும் Sainte-Laguë முறையாகும். Sainte-Laguë முறை சிறுபாண்மை கட்சிகளுக்கு விகிதாசார பங்கீட்டில் ஒரு நியாயமான தீர்வை வழங்கும்.அதே வேளை d'Hondt வழிமுறை பாரிய கட்சிகளுக்கு ஒரு சிறிய நன்மை வழங்கவல்லது.பரிந்துரை குழு இலங்கைக்கு பொருத்தமாக முறையை தெரிவு செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

வழிமுறைகளிலும் ஆசனங்கள் ஒன்றன்பின் ஒன்றான கிரமப்படி ஒதுக்கப்படுகின்றன.ஒவ்வொரு படிமுறையிலும் மொத்த வாக்குகள் ஆனது ஆசனங்களின் எண்ணிக்கை + 1 இனால் வகுக்கப்படுகிறது.அதிக வாக்குகளை கொண்ட கட்சி ஒரு ஆசனத்தை பெறும்.அதன் அடிப்படையில் அடுத்த வகுத்தல் நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொன்றாக ஆசனங்கள் ஒதுக்கப்படும்.

அனைத்து ஆசனங்களும் ஒதக்கப்படும்வரை இந்த செயல்பாடு மீள மீள மேற்கொள்ளப்படும். (செயல்முறை விளக்கத்திற்காக https://www.youtube.com/watch?v=6CU3F3ToIlg என்ற இணையத்தளத்தை பார்வையிடுக). In the Sainte-Laguë முறையில் மொத்த வாக்குகள் ஆனது இரண்டு மடங்கு ஆசனங்கள் + 1 ஆல் வகுக்கப்படுகிறது.

2018 தேர்தலில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகர சபைக்கான விகிதாநார ஒதுக்கீடு தொடர்பான ஒப்பீட்டு பார்வை கீழே தரப்பட்டுள்ளது

## அட்டவணை 3

| கட்சி | வாக்குகள் | வாக்களிப்பு வீதம் | D'Hondt முறை | சமகால முறை | Sainte-Legue முறை |
|---|---|---|---|---|---|
| ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன [SLPP] | 22,068 | 41.4% | 17 | 16 | 16 |
| ஐக்கிய தேசிய கட்சி [UNP] | 17,990 | 33.8% | 11 | 11 | 11 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னனி[UPFA] | 7,676 | 14.4% | 4 | 5 | 5 |
| மக்கள் விடுதலை முன்னனி [JVP] | 4,885 | 9.2% | 3 | 3 | 3 |
| ஐக்கிய தேசிய சுதந்திர முன்னனி [UNFF] | 522 | 1.0% | - | - | - |
| சுயாதீன குழு [IG] | 113 | 0.0% | - | - | - |
| எமது தேசிய முன்னனி [ONF] | 35 | 0.0% | - | - | - |
| மொத்தம் | 53,289 | 100% | 35 | 35 | 35 |

**3. நிர்வாகத்திறன்**

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் ( 2018) உள்ளூராட்சி அங்கத்தவர் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தியமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. உள்ளூராட்சி மன்றங்களில் பாரிய கட்சிகள் குறைந்த எண்ணிக்கை வாக்குகளுடன் குறைந்த ஆசனங்களை பெற்றன.இது தேர்தல் நடைமுறையில் உள்ள குறைபாடு அல்ல.பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட தீர்மானமே இதற்கான காரணம்.இதனால் சில உள்ளூராட்சி சபைகளின் அங்கத்தவர் எண்ணிக்கை இருந்ததைவிட இரண்டு மடங்காக அதிகரித்தது.
தேர்தல் சட்ட மூலம் வெட்டுப்புள்ளிகளை ஏற்படுத்தவில்லை.அவ்வாறு நடைபெற்றிருந்தால் சிறுபாண்மை கட்சிகளுக்கு பல ஆசனங்களை பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்காது.
இவ்வாறான நிலைமை காரணமாக உள்ளூராட்சி மன்றங்களின் உறுதித்தன்மை இல்லாமல் போகிறது.இது அந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகம் மற்றும் பரிபாலனத்தை பெரிதும் பாதிக்கும். இந்த பரிந்துரை குழு சில விடயங்களை அங்கே பரிந்துரை செய்துள்ளது.
அவையாவன :

- வெற்றி பெறும் கட்சிக்கு வழங்கப்படும் போனஸ் ஆசனங்களின் எண்ணிக்கையை 2 முதல் 4/5 வரை அதிகரியுங்கள்.அதிக வாகடகுகளை பெறும் கட்சிக்கு போனஸ் ஆசனங்கள் கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.இந்த போனஸ் ஆசனங்களை மாவட்ட ரீதியாக வழங்கும்போது ,மாவட்ட ரீதியாக வெல்லும் 2-3 கட்சிகளுக்கு அந்த நன்மை கிடைக்கும்.
- இந்த தீர்வுக்கு ஜனாதிபதியின் அனுமதி அவசியம்.அரசியல் அமைப்பின் 154A சரத்து மற்றும் மாகாண சபை (திருத்த) சட்ட மூலத்தின் 2ம் பிரிவிற்கு அமைய மேல் மாகாணம் அல்லாத ஏனைய மாகாணங்களுக்கு 2 மேலதிக ஆசனங்களை இணைத்தல்,மேல் மாகாண சபைக்கு 3 மேலதிக ஆசனங்களை இணைத்தல்.

குழுவின் ஏனைய பரிந்துரைகளாவன :

மாகாண சபைத் தேர்தலில் **<u>100 இற்கும் குறைவான அங்கத்தவர்களை</u>** கொண்ட சபைகளில் அதிக வாக்குகளை பெறும் கட்சிக்கு **4** போனஸ் ஆசனங்களை வழங்குங்கள்

மாகாண சபைத் தேர்தலில் **<u>100 இற்கும் அதிக அங்கத்தவர்களை</u>** கொண்ட சபைகளில் அதிக வாக்குகளை பெறும் கட்சிக்கு **5** போனஸ் ஆசனங்களை வழங்குங்கள்

இது விடயம் தொடர்பாக S.61A (2) இலக்க பிரிவில் போனஸ் ஆசனங்கள் குறித்த விளக்கம் வழங்கப்பட்டுள்ளது

### 4. பெண்கள் பிரதிநிதித்துவம்

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இரண்டு முக்கிய விடயங்கள் அவதானிக்கப்பட்டன.ஒன்று,25 வீத பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டது.தேர்தல் ஆணைக்குழுவினாலும் அதனை செய்ய முடியவில்லை.மற்றையது, பெண்களுக்கான பிரிதிநதித்துவம் மற்றும் வழங்கப்பட்ட ஆசனங்கள் எதேச்சையாகவும் சீரற்ற வகையிலும் மேற்கொள்ளப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.எனவே இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டியமை மிக முக்கியமானது என பரிநதுரை குழு கருதுகிறது.இந்த பரிச்சினைகளை தீர்ப்பதற்கு குழு மாற்றுவழிமுறைகள் குறித்து சிந்தித்து, கீழ் காணும் வழிமுறைகளை பரிந்துரை செய்கிறது.

- பெண்களுக்கான கட்டாய முன்மொழிவை அதிகரியுங்கள்.அதாவது FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை)யில் 1/6 ஆக இருப்பதை 1/5ஆக மாற்றுவதன் மூலம் தேர்தலில் போட்டியிடும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கலாம்
- முன் கூட்டி தரப்படுத்தப்பட்ட மாவட்ட பட்டியலில் பெண்கள் மற்றும் ஆண்களின் பெயர்களை மாற்றுவதற்கான நடைமுறையை வலுப்படுத்துக.பெயர் பட்டியல்

பெண்களின் பெயர்களுடன் ஆரம்பமாக வேண்டும்.பாராளுமன்றம் விருப்பு வாக்களிப்பு முறைக்கு மீள சென்றால்,25 வீத பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் கட்டாய நடைமுறை உள்ளடக்கப்படல் வேண்டும்[9].

பாராளுமன்றம் விருப்பு வாக்களிப்பு முறைக்கு மீள சென்றால்,25 வீத பெண்களின் பிரதிநிதித்துவத்தை

உறுதிப்படுத்தும் கட்டாய நடைமுறை உள்ளடக்கப்படல் வேண்டும்[5]

5. **நிர்வாக மாவட்டத்திற்கு பதிலாக தேர்தல் மாவட்ட ரீதியாக விகிதாசார கணிப்பை மேற்கொள்ளுதல்**

தேர்தல் தொகுதி மற்றும் மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திற்கும் தெரிவாகும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை எல்லை நிரணய ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படுகிறது.அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## அட்டவணை 4

| மாகாணம் | நிர்வாக மாவட்டம் | தேர்தல் தொகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் | மூவட்ட அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் (PR list விகிதாசாரா பட்டியல்) | நிர்வாக மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் மொத்த அங்கத்தவர்கள.[2] |
|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 20 | 20 | 40 |
| | கம்பஹா | 20 | 20 | 40 |
| | களுத்துறை | 11 | 11 | 22 |
| | | | | |
| மத்திய மாகாணம் | கண்டி | 15 | 14 | 29 |
| | மாத்தளை | 06 | 05 | 11 |
| | நுவரெலிய | 08 | 08 | 16 |

[2] இதில் **மாகானத்தில்** அதிக வாக்குகளை பெற்ற அரசியல் கட்சிக்கான 2 போனஸ் ஆசனங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. [S. 61A ஐ பார்க்கவும்]

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| தென் மாகாணம் | காலி | 11 | 11 | 22 |
| | மாத்தறை | 09 | 08 | 17 |
| | அம்பாந்தோட்டை | 07 | 07 | 14 |
| | | | | |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 08 | 08 | 16 |
| | கிளிநொச்சி | 02 | 02 | 04 |
| | மன்னார் | 03 | 02 | 05 |
| | வவுனியா | 03 | 03 | 06 |
| | முல்லைத்தீவு | 03 | 02 | 05 |
| | | | | |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 06 | 05 | 11 |
| | அம்பாறை | 07 | 07 | 14 |
| | திருகோணமலை | 05 | 05 | 10 |
| | | | | |
| வட மேல் மாகாணம் | குருநாகல் | 17 | 17 | 34 |
| | புத்தளம் | 08 | 08 | 16 |
| | | | | |
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | 11 | 10 | 21 |
| | பொலன்னறுவை | 05 | 05 | 10 |
| | | | | |
| ஊவா மாகாணம் | பதுளை | 09 | 09 | 18 |
| | மொனராகலை | 07 | 07 | 14 |
| | | | | |
| சுப்ரகமுவ | இரத்தினபுரி | 12 | 12 | 24 |
| | கேகாலை | 09 | 09 | 18 |

மேலே குறிப்பிட்டது பேன்று வட மாகாணத்தில் நிர்வாக மாவட்ட ரீதியாக தெரிவாகும் அங்கத்தவர்கள் எண்ணிக்கை மிக குறைவாகும்.இந்த நிலை, குறைந்த சனத்தொகை கொண்ட அதிக நிர்வாக மாவட்டங்கள் உள்ளதனாலேயே உருவாகிறது.இது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வட மாகாண சபையில் இறுதி முடிவில் விகிதாசார தன்மையில் சிக்கலை ஏற்படுத்தும்.ஏனெனில் அங்கு விகிதாநார நஸ்ட ஈட்டு ஆசனங்கள் போதுமானவையாக இல்லை என்பது கவனத்தல் கொள்ளத்தக்கது.

இதனை “தேர்தல் மாவட்ட” விகிதாசார கணிப்பு மூலம் சீர் செய்யலாம்.( யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியை இணைத்து யாழ் தேர்தல் மாவட்டமாகவும் மன்னார்,வவுனியா மற்றும் முல்லைத்தீவையும் இணைத்து வன்னி தேர்தல் மாவட்டமாக கொள்ளலாம் )
இதற்கு புதிய எல்லை நிர்ணயங்கள் அவசியமில்லை.எனவே FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை) எல்லை நிரணய கட்டமைப்புக்கள் அதே வகையில் பேணப்படலாம்.மாற்றங்களுக்கு பின்னர் வட மாகாண சபையின் அமைப்பு கீழ் கண்டவாறு அமையும்.

அட்டவணை 5

| மாகாணம் | தேர்தல் மாவட்டம் | தேர்தல் தொகுதிகளில் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் எண்ணிக்கை | மாவட்ட அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள்(PR list விகிதாசார பட்டியல்) | நிர்வாக மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள்.[3] |
|---|---|---|---|---|
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 10 | 10 | 20 |
| | வன்னி | 9 | 7 | 16 |
| | | | | |

# இணைப்பு 3

## பொதுவாக எழுப்பப்படும் கேள்விகள்

***வினா 1****. புதிய தேர்தல் முறை எப்போதும் பாரிய சபைகளை உருவாக்க வழிவகுக்குமா?*

---

[10] இதில் **மாகாணத்தில்** அதிக வாக்குகளை பெற்ற அரசியல் கட்சிக்கான 2 போனஸ் ஆசனங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை. [S. 61A ஐ பார்க்கவும்]

[3]மாகாண சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பதனால் இந்த பரிந்துரை மேற்கொள்ளப்படுகிறது.மாகாண சபைகளில் தற்சமயம் பெண்களின் பிரதிநிதித்துவம் 5 வீதத்திற்கும் குறைவாகவே காணப்படுகிறது.

.

இல்லை. புதிய முறை காரணமாக மாகாண சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்காது.இந்த தேர்தல் முறை மாகாணத்திற் தெரிவாகும் அங்கத்தவர்களின் முறையை மட்டுமே மாற்றியுள்ளது.ஒரு பகுதி தேர்தல் தொகுதிகளில் இருந்தும் எஞ்சிய பகுதி மாவட்ட பட்டியலில் இருந்தும் தெரிவு செய்யப்படுகிறது.உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சபையின் அமைப்பை குறைக்கும் வகையில் செயல்பாடு மேம்படுத்தப்பட வேண்டும்.உள்ளூராட்சி மன்றங்களும் எல்லை நிரணய அடிப்படையில் உருவான தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையில் தங்கியுளளது.மேலும் FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை) இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.அதில் தொங்கு நிலை விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.ஆனால் மாகாண சபைகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தேர்தல் தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை சபையின் மொதத்தில் 50 வீதமாகும்.மாகாண சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கையை எதேச்சையாக அதிகரிக்க முடியாது.மொத்த அங்கத்தவர்களிலில் இருந்து தொங் நிலை எண்ணிக்கையை கழித்து வரும் மீதியை விகிதாசார (PR) முறைப்படி கணிப்பதன் மூலம் மேம்பாட்டு அங்கத்தவர்கள் தீர்மானிக்கப்படுகிறது.

***வினா 2****. மிக உறுதியான சபைகளை உருவாக்கும் நோக்கில் முன்னைய விருப்ப தெரிவு தேர்தல் முறைக்கு சென்வது சிறப்பில்லையா ?*

இல்லை. பழைய மற்றும் புதிய முறைகள் இரண்டும் முழுமையாக விகிதாசார முறைகளாகும்.எனவே, ஒரு அரசியல் கட்சிக்கு பழைய முறைப்படி கிடைக்கும் X அளவு வாக்குகளும் புதிய முறைப்படி X அளவு வாக்குகளை பெற்றுக்கொள்ளும் கட்சியும் சம அளவு அங்கத்தவர்களையே பெற்றுக்கொள்ளும்.இந்த ஆசனங்கள் அரசியல் கட்சிகளுக்கிடையே அவை பெறும் வாக்குகளின் அடிப்படையில் பகிரப்படுகின்றன. ஓவ்வொரு அரசியல் கட்சியும் வெல்லும் ஆசனங்களுக்கு அங்கத்தவர்களை நிரப்பும் நடைமுறையே இரண்டு தேர்தல் முறைகளிலும் வித்தியாசத்தை எற்படுத்துகின்றன.பழைய முறைப்படி அங்கத்தவர்கள் விருத்தெரிவு வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.ஆனால் பதிய முறையில் FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை) மற்றும் மாவட்ட அங்கத்தவர் பட்டியலும் கலந்த முறையில் தெரிவு செய்யப்படுவர்.

***வினா 3****.* FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை) யில் அதிக அங்கத்தவர்களை வெல்லும் கட்சிக்கு முதல் அமைச்சரை தெரிவு செய்யும் வாய்ப்பு ஏன் கிடைப்பதில்லை?

அரசியல் அமைப்பின்படி, மொத்த எண்ணிக்கையில் அரவாசிக்கு அதிக அங்கத்தவர்களை பெறும் கட்சியின் தலைவரை ஆளுநர் முதலமைச்சராக நியமித்தல் வேண்டும்.

அதே வேளை, எந்த ஒரு கட்சியும் 50 வீதத்திற்கு அதிக ஆசனங்களை பெறவில்லையாயின்,சபையை முழுமையாக நிர்வகிப்பார் என்று கருதும் ஒருவரை ஆளுநர் முதலமைச்சராக நியமிப்பார்.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் சபையின் மொத்த எண்ணிக்கையில் 50வீதம் குறித்தே கவனம் செலுத்தப்பட்டது. FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை)க்கான ஆசனங்கள் சபையின் மொதத்தத்தில் 50 வீதம் மட்டுமே.எனவே FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை)யில் அதிக ஆசனங்களை பெறுதலை மட்டும் கவனத்தில் கொண்டு முதலமைச்சர் தெரிவு செய்யப்படுவதில்லை.

***வினா 4****. குறைந்த* FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை) ஆசனங்களை பெறும் கட்சி ஏன் போனஸ் ஆசனங்களை பெறுகிறது ?

இந்த எண்ணம் புதிய தேர்தல் முறையின் செயல்பாடு குறித்து பிழையான புரிந்துணர்வை எடுத்துகாட்டுகிறது.மாவட்ட மட்ட ஆசனங்கள் போனஸ் ஆசனங்கள் அல்ல.அவை வெல்லப்பட்ட FPP( முதல்-கடந்த-பின்னர் முறை) ஆசனங்களை மேம்படுத்துவதற்கான நஸ்ட ஈட்டு ஆசனங்களாகும்.அதன் மூலம் குறிப்பிட்ட அரசியல் கட்சி அந்த மாவட்டத்தில் பெற்ற வாக்குகளுக்கு ஏற்றவகையில் **நியாயமான பங்கை** வழங்கு நோக்கிலேயே இவ்வாறு செய்யப்படுகிறது.

கலப்பு அங்கத்தவர் விகிதாசார தேர்தல் முறையின் (MMP) இலகுபடுத்தப்பட்ட வழிமுறை கீழே தரப்பட்டுள்ளது :
Y எனும் மாவட்டத்தில் 10 FPP ( முதல்-கடந்த-பின்னர் முறை) ஆசனங்களும் 10 PR (விகதாசார முறை) ஆசனங்களும் உள்ளன என்ற உதாரணத்தை கருதுங்கள்.இதன் மூலம் மொத்தம் 20 ஆசனங்களாக அமைகிறது.தேர்தலில் 100,000 மக்கள் கட்சிகள் A,B,C ஆகிய கட்சிகளுக்கு கீழ் காணும் வகையில் வாக்குகள் அளிக்கப்பட்டன.

கட்சி A – 50,000 வாக்குகளை பெற்று 7 முதல் கடந்த மற்றும் பிற்பாடான தேர்தல்முறைக்கேற்ப ஆசனங்களை கைப்பற்றியது
கட்சி B – 30, 000 வாக்குகளை பெற்று 3 முதல் கடந்த மற்றும் பிற்பாடான தேர்தல்முறைக்கேற்ப ஆசனங்களை கைப்பற்றியது

கட்சி C – 20, 000 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் பெறவில்லை
மொத்தம் - 100, 000

MMP தேர்தல் முறைக்கேற்ப மாவட்ட மட்ட முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன

## அட்டவணை 6

| அரசியல் கட்சி | மொத்த வாக்குகள் | வாக்களிப்பு வீதம் (நிரல் 1) | கட்சி அடிப்படையில் பகிரப்பட்ட ஆசனங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | FPP ஆசனங்கள்( நிரல் II) | அனைத்து ஆசனங்கள் (நிரல் III)[4] மொத்த ஆசனங்கள் x நிரல் A | விகிதாசார நஷ்ட ஈட்டு ஆசனங்கள்[5] [நிரல்- C–நிரல்B ] |
| A | 50,000 | 50% | 7 | 10 | 3 |
| B | 30,000 | 30% | 3 | 6 | 3 |
| C | 20,000 | 20% | 0 | 4 | 4 |
| மொத்தம் | 100,000 | 100% | 10 | 20 | 10 |

**வினா** 5. ஒரே ஆசன தேர்தல்தொகுதியில் பல பிரதிநிதித்துவங்களை நாம் ஏன் பெறுகிறோம் ?

எந்தவொரு தகுதி நிராகரிக்கப்படாத வாக்காளரும் மாகாண சபைத்தேர்தலில் வேட்பாளராக போட்டியிட தகுதி பெறுகிறார்.மாவட்ட பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் அந்த மாவட்டத்தில் ஏதாவது ஒரு பிரதேசத்தை வதிவிடமாக கொண்டிருக்கலாம்.அந்த சந்தர்ப்பங்களில் தேர்தல் தொகுதி மற்றும் மாவட்ட பட்டியல்களில் உள்ள பெயர்கள் ஒரே ஆசன தேர்தல் தொகுதியைச் சேர்ந்தவர்களாக அமையலாம். இந்த நிலைமையை தவிர்க்க முடியாது.

---

[4] மொத்த ஆசனங்கள் x நிரல் I
[5] நிரல் III – நிரல் II]